දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.
පාසල් කටයුතු හා පෞද්ගලික පාසල් ශාඛාව

(37)

මගේ අංකය / எமது இல. / My No. : ED/01/12/

ඔබේ අංකය / உமது இல. / Your No. : .............................

දිනය / திகதி / Date : 2013.06. 11

சுற்று நிருப இல : 25/2013

மாகாண பிரதான செயலாளர்கள்,
மாகாண கல்விச் செயலாளர்கள்,
மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டப் பொறுப்பு பிரதி/உதவிக்கல்விப்பணிப்பாளர்கள்,
அரச பாடசாலைகளின் அதிபர்கள்.

## க.பொ.த.(உயர் தர) வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

வேகமாக மாற்றம் பெறும் சமூகத் தேவைகளுக்கு ஏற்ப தேர்ச்சியுடன் கூடிய மாணவர் பரம்பரையொன்றை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. பாடசாலை மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் நோக்குடன் “தொழிநுட்பவியல் பாடத்துறை” எனும் பெயரில் புதிய பாடத்துறையொன்று 2013 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலைத் தொகுதிக்கு அறிமுகம் செய்யப்படுகின்றது.

02 இதற்கேற்ப க.பொ.த(உ.த) வுகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பில் இதற்குமுன் வெளியிட்டுள்ள 2008.04.30 ஆம் திகதியும் இலக்கம் 2008/17 ஐயும் கொண்ட சுற்றுநிருபத்திற்கும் இது தொடர்பில் வெளியிட்டுள்ள 2008.12.31 ஆம் திகதிய இல:2008/17(I), 2009.06.02 ஆம் திகதிய இல:2008/17(II), 2012.05.30 ஆம் திகதிய இல: 2012/14, 2013.04.29 ஆம் திகதிய 2013/04 யினையும் கொண்ட சுற்று நிருபங்களின் திருத்தங்களுக்கும் மேலதிகமாக கீழ்வரும் திருத்தத்தினையும் உட்படுத்துகின்றேன்.

03. 2008/17 சுற்று நிருபத்தின் 2.5 உப பிரிவின் “12 ஆம் வகுப்பின் பாடத்துறைகளுக்கு அனுமதி பெறுவதற்கான விஷேட தகைமைகள்” எனும் தலைப்பின் கீழ் (அ),(ஆ) பகுதிகளுக்கு மேலதிகமாக (இ) எனும் பிரிவும் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்.

2.5(இ) தொழில் நுட்பப்பிரிவு

தொழில் நுட்பவியல் பாடத்துறை

இப்பாடத்துறையை பின்பற்றுவதற்காக க.பொ.த (சா/த) கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

04. மேற்குறிப்பிட்ட மேலதிக விதிமுறைகள் தவிர்ந்து இங்கு முதல் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்று நிருபங்களில் உள்ள ஏனைய விடயங்கள் அனைத்தும் அதிலுள்ளவாறே அமுலில் இருக்கும்.

எஸ்.எம்.கோட்டாபய ஜயரத்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
2. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
3. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
5. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
6. அனைத்து மாகாணச் செயலாளர்கள்
7. அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
8. அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary — 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**
'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.
පාසල් කටයුතු හා පෞද්ගලික පාසල් ශාඛාව

ඔබේ අංකය / உமது இல. / Your No. Date — ..............................

මගේ අංකය / எமது இல. / My No. — ED/01/12/

දිනය / திகதி — 2013.06. 11

தொழில் நுட்பவியல் பாடத்துறை அமுல்படுத்தப்படும் பாடசாலைகளின் அதிபர்களுக்கு.

**க.பொ.த (உயர் தரம்) தொழிநுட்பவியல் பாடத்துறையை ஆரம்பித்தல் - 2013**

க.பொ.த (உயர் தரம்) பாடத்துறைகளுக்கு ஏற்ப வெளியிடப்பட்டுள்ள இல. 2009/16 எனும் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகள் நான்கிற்கு மேலதிகமாக ஐந்தாவது பாடத்துறையாக தொழில் நுட்பவியல் பாடத்துறை, முதற் கட்டமாக மஹிந்தோதய தொழிநுட்ப ஆய்வுகூடங்களுடன் கூடிய தெரிவுசெய்யப்பட்ட 200 பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 12 ஆம் தரத்திற்கு அனுமதிபெறும் மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

02. இப்பாடத்துறையைப் பின்பற்றும் மாணவர்களுக்காக கீழ்வருமாறு பாடச் சேர்மானங்கள் முன்வைக்கப்படுகின்றது.

2.1 கீழ்வரும் பாடங்கள் கட்டாயமாக தெரிவு செய்யப்படல் வேண்டும்.
பொறியியல் தொழிநுட்பவியல் அல்லது உயிர்த்தொகுதித் தொழிநுட்பவியல்
தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம்.

2.2 மூன்றாவது பாடத்தை கீழ்க்காட்டப்பட்டுள்ள பாடங்களிலிருந்து தெரிவுசெய்துகொள்ளல் வேண்டும்.

| | |
|---|---|
| பொருளியல் | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| புவியியல் | சித்திரம் |
| மனைப்பொருளியல் | வணிகக் கல்வி |
| ஆங்கிலம் | விவசாய விஞ்ஞானம் |
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | கணக்கீடு |

03. இது தொடர்பாக விரிவான சுற்றுநிருபம் எதிர்காலத்தில் வெளியிடப்படும். அதுவரை மேற்குறிப்பிட்டபடி செயற்படுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

எஸ்.எம்.கோட்டாபய ஜயரத்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

9. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
10. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
11. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
12. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
13. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
14. அனைத்து மாகாணச் செயலாளர்கள்
15. அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
16. அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்